மின்னணு செய்தி மடல்
இதழ்: 13
பிப்ரவரி - ஏப்ரல் 2022

# புதிய தலைமுறை அறக்கட்டளை

"ஊக்கமது கைவிடேல்"

(கிராமப்புறக் கல்வி மற்றும் இளைஞர் மேம்பாட்டுக்காக பணியாற்றும் ஓர் மக்கள் இயக்கம் - இந்தியாவின் மிகப்பெரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் ஒன்று)

## தமிழகம் மேலும் சிறப்புகள் பெற பாரதத்தின் சிறப்பான மாநிலமாக திகழ்ந்திட.....

என்றும் சமூகப் பணியில்..... உங்கள் புதிய தலைமுறை அறக்கட்டளை....

- சிறு மற்றும் கிராமப்புறத் தொழில் வாய்ப்புகள்
- வள்ளியம்மை அம்மாள் கிராமப்புற மருத்துவ உதவித் திட்டம்
- இலவச கிராமப்புறக் கல்வி மையங்கள், "பன்னிரெண்டாம் வகுப்பிற்கு பிறகு என்ன படிக்கலாம் ?"
- கல்லூரி மாணவர்களுக்கு சுயதொழில் & வேலை வாய்ப்பு வழிகாட்டுதல்
- சாலை பாதுகாப்பு நிகழ்ச்சிகள்
- வள்ளியம்மை அம்மாள் பெண்கள் தையற் பள்ளி & நூலகம்
- யோகா பயிற்சி முகாம்



"இளைஞர்களே எதிர்காலம் ! அவர்களைப் போற்றுவோம் எந்நாளும்"...

முனைவர். பி. சத்தியநாராயணன்
நிறுவனர் & அறங்காவலர்
புதிய தலைமுறை அறக்கட்டளை

## 73 வது குடியரசு தினவிழா கொண்டாட்டம் - 26.01.2022



புதிய தலைமுறை அறக்கட்டளை அலுவலகம், தி.நகர், சென்னை

புதிய தலைமுறை அறக்கட்டளை, ஜி. என். செட்டி சாலை அலுவலகத்தில் ஏற்பாடு செய்த 73 வது குடியரசு தின விழாவில் தேசிய கொடியை ஏற்றி வைத்து, சென்னை புதுக்கல்லூரி முதல்வர் டாக்டர். பஷீர் அகமது பேசுகையில், "ஒரு தாய் மக்கள் நாம்" (நாம் இந்திய அன்னையின் குழந்தைகள்), பிரார்த்தனைகள், பெற்றோரின் ஆசிகள், ஆசிரியர்களுக்கு மரியாதை மற்றும் அணுகுமுறை ஆகியவை ஒரு மாணவனை வெற்றியடையச் செய்யும்..." என்று கூறினார். மேலும் "பல புதிய விஷயங்களையும், பல மொழிகளையும் கற்றுக் கொள்ள தயங்கக் கூடாது" என்றார்.



டாக்டர். பஷீர் அகமது

"கற்றுக் கொள்ள தயங்கக் கூடாது, பல மொழிகளைக் கற்றுக் கொள்ளுங்கள்"



சிறப்பு விருந்தினர் கொடியேற்றிய காட்சி

இந்நிகழ்வில் சுமார் 50 உறுப்பினர்கள் – புதிய தலைமுறை அறக்கட்டளை பணியாளர்கள், விழுதுகள் மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

Our Sponsors
SRM TECHNOLOGIES
Green Pearl EDUCATION
CITY UNION BANK LTD
NABARD NATIONAL BANK FOR AGRICULTURE AND RURAL DEVELOPMENT
TMB Tamilnad Mercantile Bank Ltd Be a step ahead in life

புதிய தலைமுறை அறக்கட்டளை

(கிராமப்புறக் கல்வி மற்றும் இளைஞர் மேம்பாட்டுக்காக பணியாற்றும் ஓர் மக்கள் இயக்கம் - இந்தியாவின் மிகப்பெரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் ஒன்று)

## சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் விழா - இளைஞர்கள் தினம்





ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12 ஆம் தேதி அன்று சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் இளைஞர்களின் தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் விழா, விழுதுகள் மாணவர்களுக்கு காணொளி வழியாக நடத்தப்பட்டது. சுமார் 60 மாணவர்கள் கலந்து கொண்ட இந்த விழாவிற்கு புதிய தலைமுறை அறக்கட்டளை செயலாளர் திரு. து.வே. வெங்கடகிரி, மேலாளர் – கே.எ.ம். சாதிக் பாஷா மற்றும் மேலாளர் – விழுதுகள் திட்டம் இ. மணிராஜ் ஆகியோர் மாணவர்களை ஊக்கப்படுத்தும் உரையை நிகழ்த்தினார்கள். விவேகானந்தரின் தேச பக்தி கருத்துக்களையும், போதனைகளையும் தொகுத்து அளித்தனர்..

இளமை முதலே ஆன்மீகமும் தேசியமும் விவேகானந்தரின் உள்ளத்தில் நிறைந்திருந்தது. அதனால் துறவறம் பூண்டு இராமகிருஷ்ண பரமஹம்சரை தனது ஆன்மீக வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டார். தனது சிறந்த நண்பர்களுள் ஒருவரான இராமநாதபுரத்தில் சேதுபதி மன்னரின் உதவியுடன் அமெரிக்கா சென்று சிக்காகோ நகரில் நடைபெற்ற சர்வசமய மாநாட்டில் (1893 ஆம் ஆண்டு) தமது இந்திய நாட்டின் ஆன்மீகப் பெருமைகளை எடுத்துக்கூறினார். **“இளைஞர்களே! விழித்தெழுங்கள் உங்களால் மட்டுமே நவீன இந்தியா உருவாகும்”** என்பதே சுவாமி விவேகானந்தரின் போதனையின் மையக் கருத்து ஆகும்.

> **“இளைஞர்களே! விழித்தெழுங்கள் உங்களால் மட்டுமே நவீன இந்தியா உருவாகும்”**

## முன்னேற்றப் பாதையில் தையல் பயிற்சி பெற்ற பெண்கள்



புதிய தலைமுறை அறக்கட்டளை நடத்தும் வள்ளியம்மை அம்மாள் பெண்கள் தையற் பள்ளியில் பயிற்சி முடித்த பத்து நபர்கள் 24.02.2022 அன்று ராமாபுரத்தில் உள்ள ”கிராஸ் கலர்ஸ்” நிறுவனத்திற்கு ஒரு குழுவாகச் சென்று அதன் உரிமையாளரும், புதிய தலைமுறை அறக்கட்டளையின் ISRB Expo Forum உறுப்பினருமான திரு. ராஜேஷ் அவர்களை சந்தித்தனர்.

> “துணியின் ரகங்களைத் தெரிந்து கொண்டு அதற்கேற்ற டிசைனை வடிவமைப்பது சிறந்தது.”



திரு. ராஜேஷ்

தையற் தொழிலில் நவ–நாகரீக ஆடைகள் வடிவமைப்பது, வீட்டில் இருந்து கொண்டே ஆடைகள் தைத்துக் கொடுத்து வருமானம் ஈட்டுவது, துணி ரகங்களைக் கண்டறிவது, எப்படி விற்பனை செய்ய வேண்டும், மொத்தமாக பொருளை பெற்றுக் கொள்வது எப்படி? என்று பல கேள்விகளுக்கு தெளிவாக விளக்கம் அளித்தார். டெய்லரிங் வகுப்பில் பயின்றவர்கள் அங்கிருந்த கட்டிங் மாஸ்டரிடமும், தையல் வேலை செய்து கொண்டிருந்த பெண்களிடமும் சில சந்தேகங்களையும், நுணுக்கங்களையும் கேட்டு தெரிந்து கொண்டனர். இந்த கலந்துரையாடல், பயிற்சி பெற்ற தையற் கலைஞர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இந்நிகழ்ச்சியில் புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஊழியர்கள் எஸ். சுரேஷ்கண்ணன் – பொதுமேலாளர், கே.எம். சாதிக்பாஷா – மேலாளர், பி.விஜி – கணக்காளர் மற்றும் எஸ்.ராஜாத்தி – பயிற்சியாளர், வள்ளியம்மை அம்மாள் பெண்கள் தையற் பள்ளி, ஆகியோர் கலந்து கொண்டனர்.



புதிய தலைமுறை அறக்கட்டளை

பிப்ரவரி - ஏப்ரல் 2022

(கிராமப்புறக் கல்வி மற்றும் இளைஞர் மேம்பாட்டுக்காக பணியாற்றும் ஓர் மக்கள் இயக்கம் - இந்தியாவின் மிகப்பெரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் ஒன்று)

E²G Forum
Entrepreneurship & Employment Guidance Forum
"Exclusively for College Students"
(A Unit of Puthiya Thalaimurai Foundation)

**Entrepreneurship & Employment Guidance Forum**
**Attention Placement Officers of colleges:**
For Seminars & Workshops on Job Opportunities for fresh graduates,
Please call: 8754417500; 8122387627 or email: sm@ptfindia.org; contact@ptfindia.org

## SRM வள்ளி மருத்துவமனை - பயனாளர் அட்டை வழங்கும் விழா



ஜனவரி 27, 2022 அன்று பொத்தேரியில் இயங்கி வரும் எஸ்.ஆர்.எம் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் 55 பயனாளர்களுக்கு "வள்ளி" மருத்துவ அடையாள அட்டை வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

எஸ்.ஆர்.எம். மருத்துவமனை அடித்தள மக்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைக்கும் வகையில் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. புதிய தலைமுறை அறக்கட்டளையுடன் இணைந்து இலவச ஆம்புலன்ஸ், இலவச நடமாடும் மருத்துவ ஊர்தியும் செயல்படுகிறது. தற்போது பயனாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

மருத்துவ பயனாளர் அட்டையை சார்பு துணைவேந்தர் டாக்டர். திரு. ரவிக்குமார் வெளியிட்டார். டாக்டர். திரு. சுந்தரம் (டீன், மெடிக்கல்), டாக்டர். திரு. தங்கராஜ், மருத்துவ கண்காணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். Amphenol Omni Connect India Pvt. Ltd. திருமதி. பூங்கொடி காவல்துறை ஆய்வாளர் (ஓய்வு) திரு. முருகன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். வள்ளி செய்தி மடலை மருத்துவ நிபுணர்கள் டாக்டர். திரு. லோகராஜ், டாக்டர். திரு. கணபதி சங்கர், புதிய தலைமுறை அறக்கட்டளை செயலாளர் திரு. து.வே. வெங்கடகிரி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். எஸ்.ஆர்.எம். மருத்துவமனையை அணுகி மருத்துவ அடையாள அட்டையை பயன்படுத்தி, சிகிச்சைக் கட்டணத்தில் 20% தள்ளுபடியுடன் சிகிச்சை பெறலாம்.

வள்ளி பயனாளர் அட்டையின் மூலம் உதவி பெற்ற முதல் பயனாளர் திரு. பிரேம் குமார் அவர்களுக்கு டாக்டர். கார்திக், துணை இயக்குனர், எஸ்.ஆர்.எம். மருத்துவமனை அவர்கள் வள்ளி பயனாளர் அட்டையை வழங்கினார்.



## புதிய தலைமுறை அறக்கட்டளை - கிராமப்புறக் கல்வி மையத்தில் நடத்திய கட்டுரைப் போட்டி

கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் புதிய தலைமுறை அறக்கட்டளை கிராமப்புற பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை கவனத்தில் கொண்டு சிறப்பு பயிற்சி வகுப்புகளை, சமூகத் தொண்டில் ஆர்வம் கொண்ட, கற்றலின் அனுபவமிக்க ஆசிரியர்கள் தலைமையில் நடத்தி வருகிறது. மாணவர்களுக்கு சிறு தேர்வுகள் வினாடி – வினா நிகழ்ச்சிகள் சொற்பொழிவுகள், கருத்தரங்கங்கள், கலந்துரையாடல்கள் மூலம் கற்றல் திறனை அதிகரித்து அறிவு வளர்ச்சிக்கு அடித்தளமிட்டு வருகிறது.

**மாணவக் கண்மணிகளின் கட்டுரைகளிலிருந்து சில முத்துச் சிதறல்கள்...**

**1. நான் மாவட்ட கலெக்டர் ஆனால் என்ன செய்வேன்?**
விவசாயிகள், எளிய மக்களின் நலன் மற்றும் பெண்கள் பாதுகாப்பு.

**2. நான் காவல்துறை அதிகாரி ஆனால் என்ன செய்வேன்?**
தமிழக அரசின் காவல்துறை செயலியை மக்களிடம் கொண்டு சென்று விழிப்புணர்வை ஏற்படுத்துவேன். சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவேன்.

**3. என் குடும்பத்தின் முக்கியமானவர்கள் யார்? என்ன காரணம்?**
நூறு ஆசான்களுக்கு ஒப்பானவர் ஒரு பொறுப்பு மிக்க தந்தை

இந்தப் பயிற்சிகளின் தொடர்ச்சியாக 2021 ஆண்டு நவம்பர் மாதம் ஒரு கட்டுரை போட்டி அறிவிக்கப்பட்டது. இதில் 14 மையங்களை சேர்ந்த 130 மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களும் வியக்கத்தக்க வகையில் பதிலை கட்டுரையாக எழுதி அனுப்பினார்கள். சிறந்த கட்டுரைகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மனோரமா இயர்புக் 2022, திருக்குறள் & சுவாமி விவேகானந்தரின் வீரமுழக்கம் ஆகிய மூன்று புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அதை பெற்றுக் கொண்ட மாணவர்கள் மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர்.




புதிய தலைமுறை அறக்கட்டளையின் கிராமப்புற கல்வி நிலையங்கள் - புதூர் நாடு, வேலூர்- மற்றும் தாண்டவராயபுரம், சேலம்

PUTHIYA THALAIMURAI FOUNDATION
(A People-based movement working for Youth Development and Rural Education - One of the Largest NGOs in India)

ISRB EXPO FORUM™
Indian Small & Rural Business Exposition
(A Unit of Puthiya Thalaimurai Foundation)
(A National Initiative to Promote Small & Rural Businesses)

## National Workshop Series on Micro Entrepreneurship for Youth - 3rd Edition

## Export Business Opportunities in Tamil Nadu

## தமிழ் நாட்டில் ஏற்றுமதி தொழில் வாய்ப்புகள் - இரண்டு நாள் கருத்தரங்கம்

JSS College of Pharmacy,
Rocklands, Ooty, The Nilgiris
March 5 & 6 2022

## Glimpses of the Seminar



சிவராமன்,
பயிற்சியாளர்



“ஏற்றுமதி தொழில் செய்வதற்கு அந்த நாட்டைப் பற்றிய கலாச்சாரம், பண்பாடு, தொழில் வளர்ச்சி, அரசியல் சூழ்நிலை மற்றும் அனைத்து தகவல்களையும் தெரிந்து கொள்வது அவசியம்”. அதே போல் சிறு வியாபாரிகளின் தொடர்பும் முக்கியம்.”

**தொடர்புக்கு: 8754417308, 8754417500**

# செயலாளர் பக்கம்

## CSR – சமூக மாற்றத்திற்கான ஒரு கருவி – 2



து.வே. வெங்கடகிரி
செயலாளர்

செங்கல்பட்டு மாவட்டம் கலிவந்தப்பட்டைச் சேர்ந்த 60 வயது விவசாயி அழகேசன் – கூறுகையில், “எங்கள் கிராமத்தில் நோயாளிகளுக்கு முறையான மருத்துவ வசதி கிடைப்பது மிகவும் கடினம். நாங்கள் சிறு சிகிச்சைக்குக் கூட 10 கி.மீ. பயணம் செய்ய வேண்டும். இது மிகவும் சிரமமாக இருந்தது. இப்போது எஸ்.ஆர்.எம். மருத்துவ வேன் வந்துவிட்டது... மிக்க நன்றி” !

அக்டோபர் மாதம் 2021 முதல் புதிய தலைமுறை அறக்கட்டளை, குயிக் ஹீல் அறக்கட்டளை & எஸ்.ஆர்.எம் மருத்துவமனை, பொத்தேரி இணைந்து நடத்தும் நடமாடும் மருத்துவ ஊர்தி செயல்பட தொடங்கியது. மருத்துவ ஊர்தியில் மருத்துவரும், செவிலியரும் மக்களை பரிசோதித்து உரிய மருந்துகள் வழங்குகின்றனர்.

செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் சுற்றியுள்ள கிராமங்கள் தினசரி பயன்பெறும் வகையில், நடமாடும் கிளினிக் திட்டத்தை செயல்படுத்தியது எங்களுக்கு மிகவும் தேவையான ஊக்கத்தை அளிக்கிறது. மொபைல் கிளினிக்கை நன்கொடையாக வழங்கிய குயிக் ஹீல் அறக்கட்டளைக்கு நன்றி.

### Community Healthcare Public–Private–Partnership
### சமுதாய ஆரோக்கியம்–தனியார்–பொதுத்துறை–கூட்டு முயற்சி

ஜி.எஸ்.டி சாலை மற்றும் மறைமலைநகர் சந்திப்பில் நிறுத்தப்பட்டிருந்த ஆம்புலன்சுக்கு, ஓர் தொலைபேசி அழைப்பு வந்தது. கடுமையான நெஞ்சுவலியால் அவதிப்படும் லட்சுமி நரசிம்மன் (56) என்பவரது இல்லத்திலிருந்து (செங்கல்பட்டு மாவட்டம், கூடலூர் கிராமம்) உதவி கோரப்பட்டது. ஆம்புலன்ஸ் அவரது வீட்டு வாசலுக்கு வந்து முதலுதவி அளித்து பின்னர் எஸ்.ஆர்.எம் மருத்துவமனைக்கு சரியான நேரத்தில் அழைத்துச் சென்றது. அவரை பரிசோதித்த டாக்டர்கள், அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதை கண்டறிந்து சரியான நேரத்தில் சிகிச்சை அளித்து, உயிரை காப்பாற்றினர். லட்சுமி நரசிம்மன் கண்ணீருடன், ஆம்புலன்ஸ் ஓட்டுநர், மருத்துவ உதவியாளர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்ததோடு, தான் மீண்டும் பிறந்தது போல் உணர்கிறேன் என்று கூறினார். ஆம்புலன்ஸை வழங்கிய ஆம்பினோல் ஆம்னி கனெக்ட் நிறுவனத்திற்கு நன்றி!

**சுகாதார துறைக்கு நிதி ஒதுக்கீடு 2022–23 (ரூபாய் கோடியில்):**
**மத்திய அரசு: 83,000 | தமிழக அரசு: 17,902**
**இந்திய நிறுவனங்களின் CSR பங்கு 2015–2020 : 23,989**

புதிய தலைமுறை அறக்கட்டளை, உடல்நிலை சரியில்லாதவர்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதற்காக அரசு, மருத்துவமனைகள், தனியார் துறை மற்றும் உள்ளூர் சமூகங்கள் என பல்வேறு பங்குதாரர்களுடன் நெருக்கமாகச் செயல்பட்டு வருகிறது. மருத்துவ சுகாதார வசதிகளை வழங்குவதில் பொது–தனியார் கூட்டாண்மை நீண்ட காலமாக இந்தியாவில் நடைமுறையில் உள்ளது. கடந்த 20 ஆண்டுகளில், குறிப்பாக கொரோனா தொற்று பரவிய இந்த இரண்டு ஆண்டுகளில், CSR பங்கு மருத்துவ சேவைக்காக பெரிய அளவில் வளர ஆரம்பித்துள்ளது.

புதிய தலைமுறை அறக்கட்டளை
24, ஜி.என். செட்டி சாலை, தி.நகர், சென்னை 600017
அலைபேசி: 8754417338, 8754417308, 8754417500, 8754417322
மின்னஞ்சல்: newsletter@ptfindia.org; sm@ptfindia.org

அச்சிட்டு வெளியிடுபவர் : து.வே.வெங்கடகிரி, செயலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை